சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 3782/E/2024**

| | | |
|---|---|---|
| திரு.இரா.சத்தியமூர்த்தி | -- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>தர்மபுரி - 636 705. | | பொது அதிகார அமைப்பு |
| வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம், அரூர் வட்டம்,<br>தர்மபுரி மாவட்டம். | | |

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அரூர் வட்டம், அவர்கள் இவ்வாணையத்தில் 27.03.2026-ல் ஆஜராகி, இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 09.09.2023 தேதியிட்ட மனுதாரர் மனு மீது, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பட்டா ரத்து செய்ததற்கான ஆணை நகல் மற்றும விசாரணை ஆவணங்கள் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் நிலம் அவர்களின் கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

2. அதன்படி, பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பா.ஷெர்லி ஏஞ்சலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), தருமபுரி அவர்கள் இவ்வாணையத்தில் 27.03.2026-ல் நேரில் ஆஜராகி, இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புறம்போக்கு

நிலத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரிய மனு மீது, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அரூர் வட்டாட்சியரின் செயல்முறை ஆணைகள், ந.க.1459/2024/பி3, நாள் 15.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் நகல் (புறம்போக்கு பட்ட ரத்து செய்யப்பட்டது தொடர்பான) மனுதாரருக்கு தகவலாக வழங்கப்பட்டுள்ளதாக 26.03.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

3. மேற்படி பொதுத் தகவல் அவலர்களின் அறிக்கையினை ஆணையம் பரிசீனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுதாரரின் 09.09.2023 தேதியிட்ட மனு மீது பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் நகல், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தருமபுரி அவர்கள் கடித்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3782/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தர்மபுரி - 636 705.

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், அரூர் வட்டம்,
தர்மபுரி மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.இரா.சத்தியமூர்த்தி, த/பெ.ராஜிகண்ணு,
க.எண்.220, அசாக் இல்லம்,
கோவிந்தசாமி நகர் 4-வது தெரு,
அரூர் வட்டம், தர்மபுரி மாவட்டம் - 636 903.

Copy to: File MP/PA,